


- **ஞாநி**

ஓவியம்: பிரேம் டாவின்ஸி

**“மறக்க முடியாத நெருப்பு மலர்?”**

“சரித்திரத்தில் பலர். சமகாலத்தில் திவ்யா பாரதி.”

**“உங்கள் வட்டத்துக்குள் யாரெல்லாம் அடங்குவர்?”**

"ஒருவரையொருவர் மதிக்கிற அன்பு செலுத்துகிற அனைவரும் அடங்குவர்”

**“மறக்க முடியாத சண்டைக்காரி?”**

“தோழி பத்மா. சண்டைக்காரி என்ற சொல்லை ஒரு பாசிட்டிவான தலைப்பாகவே என் நூலுக்கு வைத்திருக்கிறேன்.”

**“பூங்கொத்து கொடுக்க நினைக்கும் அரசியல்வாதி?”**

“திருமாவளவன்”

**"ஷொட்டு கொடுக்க நினைக்கும் இலக்கியவாதி?”**

“அண்மைக்காலமாக இமையம், சிறுகதைகளில் பின்னுகிறார்.”

**"ஓ?”**

“எல்லாமேதான்.”

**"குழந்தைகளிடமிருந்து, பெற்றவற்றில் ஒன்று?”**

“எப்போதும் விளையாடும் மனம்.”

**“ 'கேணி'யில் கிடைத்தது?”**

“தூய்மையான இலக்கிய ஊற்றுத் தண்ணீர்.”

**"பெரியார்?”**

“எப்போதும் தேவைப்படுபவர்.”

**"ஆலந்தூரில் வென்றிருந்தால் செய்ய நினைத்த முதல் விஷயம்?"**

"ஒவ்வொரு தொகுதியிலும் என்னைப் போன்ற இன்னொருத்தர் வெல்வதற்கு இயக்கம் கட்டுவது."

**"பிடித்த அரசியல் எழுத்தாளர்?"**

"முன்னாள் மேற்கு வங்க அமைச்சர், பொருளாதார அறிஞர் அசோக் மித்ரா, மறைந்த திரேன் பகத், நிகில் சக்ரவர்த்தி."

**"பிடித்த பத்தி எழுத்தாளர்?"**

"கடுகு"

**"அமெரிக்காவில் பிடித்ததும் பிடிக்காததும்?"**

"மண்ணும் மக்களும் பிடித்தவை. உலக நாட்டாமை செய்யும் அரசும் அநீதியும் பிடிக்காதவை."

**" தீம்தரிகிட?"**

"எப்போதும் உள்ளுக்குள் ஒலித்துக்கொண்டிருக்கும் லயம்."

**" 'பரீக்ஷா ' பயணத்தில் மறக்க முடியாத நாள்?"**

"எங்கள் நாடகத்தை, எனக்குப் பள்ளியில் நாடகம் கற்றுக்கொடுத்த ஆசிரியர் வந்து பார்த்த நாள்."

**"உங்களுடைய சுயசரிதையில் யார் அதிகம் இடம்பெறுவார்கள்?"** "நான்தான். அப்பத்தானே அது 'சுயசரிதை ."

**சந்திப்பு: விஷ்ணுபுரம் சரவணன்**

**விகடன் தடம் /**
**செப்டம்பர் 2017 / www.vikatan.com**